1979 ஏப்ரல் 17]

சிப்பிகுளம், வேம்பாரு ஆகிய இடங்களில் படகுத் துறைகள்.

*வினா எண். 718— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் உள்ள சிப்பிகுளத்திலும், வேம்பாரிலும் 'ஜட்டி' (சிறுதுறைமுகம்) அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில்தான் இக்கேள்வியே எழுப்பப்பட்டது. ஆனால் இப்பொழுது தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி மக்களை குறிப்பாக மீனவ மக்களை மனத்தில் கருதி உடனடியாக இதை அமைக்க ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது இல்லை என்று தான் சொன்னேன். ஆனால் சம்பந்தப்பட்ட துறையினுடைய பரிசீலனையில் அது இருக்கிறது. துறை தனது முடிவை சமர்ப்பித்தவுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூர் எஸ்.டி.எம். கோர்ட்.

*வினா எண். 719.—திரு. கு. ரமணி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள எஸ்.டி.எம். (S.D.M.) கோர்ட்டில் வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகைகள் பல தாக்கல் செய்யப்படாமல் உள்ளனவா ?

(ஆ) இதனால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு நியாயம் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?